# இனவாதமும் ஜே.வி.பியும் (JVP) ஒரு விமர்சன ரீதியான ஆய்வு

**பிரஷாந்தினி, மு., கணேசலிங்கன், கே.ரீ .**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
prashanthinimuniswara@gmail.com

*இவ்வாய்வானது "இனவாதமும் ஜே.வி.பியும் ஒரு விமர்சன ரீதியிலான ஆய்வு; என்ற தலைப்பில் அமைகின்றது. நாகரீகம் தோன்றிய காலத்தில் இருந்து மக்கள் சமூக, கலாசார, பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற பொதுவான நோக்கங்களுக்காக கூட்டாகச் சேர்ந்து பெரிய அமைப்புகளை ஏற்படுத்தி வந்தனர். அந்த வகையில் கட்சி என்பது கூட்டு வாழ்க்கைக்கான ஓர் அமைப்பு ஆகும். அத்தோடு நிறுவப்பட்ட சமுதாயம் மட்டுமே கட்சி எனப்படுகின்றது. இவ்வாறான நோக்கில் அரசியல் கட்சி என்பது இருநூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட ஒரு நவீன ஜனநாயக நிகழ்வாக கொள்ளப்படுகின்றது. பொதுவாக கட்சிகளினை அதனுடைய நோக்கம், கொள்கை என்பனவற்றைக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் அடிப்படை மாற்றங்களையும் சீர்திருத்த சட்டங்களையும் அறிமுகப் படுத்தும் விரும்பும் அமைப்புக்களே இடதுசாரி கட்சிகள் எனப்படுகின்றன. உலகின் பெரும்பாலும் இடதுசாரி கொள்கையின் அடிப்படையிலான கட்சிகளே பரவலாக தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் இலங்கையில் தோற்றம் பெற்ற இடதுசாரி கட்சியான மக்கள் விடுதலை முன்னணியானது இலங்கையின் மூன்றாவது பெரும் சக்தியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அரசியலில் பலமான அமைப்பாக இன்றையளவும் பேசப்பட்டு வருகின்றது. இக்கட்சியானது 1965 ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணியின் தலைவராக இருந்த ரோஹண விஜயவீரா அவர்களினால் உருவாக்கப்பட்டது. இக்கட்சியானது ஆரம்பம் தொட்டு அதன் கொள்கைகளில் தீவிரமான இடதுசாரி போக்குகளை கடைப்பிடித்து வந்ததோடு பின்னர் தன்னுடைய அரசியல் நலனுக்காக கிராமமட்டத்தில் உள்ள இளைஞர் சமூகத்தினை கொண்டு 1971 ஆம் ஆண்டு மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் இலங்கை வரலாற்றில் மாபெரும் இரண்டு புரட்சிகளை மேற்கொண்டது. இதனால் பாரிய உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக இக்கட்சி அரசாங்கத்தினால் தடைச் செய்யப்பட்டு இதன் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. பின்னர் 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் தன்னுடைய கொள்கையை மாற்றி அமைத்துக்கொண்டு மிதவாத எழுச்சியுடன் இலங்கை அரசியல் களத்தில் குதித்து ஜனநாயக முறைமையில் அரசியலில் ஈடுபட்டு வந்ததுடன் இக்கட்சியானது தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. இவ்வாறு கட்சியானது தோற்றம் பெற்றிருந்த காலப்பகுதியிலிருந்து இன்றைய காலம் வரை பலதடவை தடை செய்யப்பட்டு வீழ்ச்சி நிலையினை அடைந்திருந்தபோதிலும் இலங்கை அரசியலில் ஒரு வலுவான மூன்றாம் சக்தியாக தன்னை நிரூபித்து கொள்வதற்காக இனவாத கொள்கைகளினை வெளிப்படுத்தியும் செயற்பாடுகளை செயற்படுத்தியும் மக்களிடையே விரோதமான போக்கினை விதைத்து வருகின்றது. அத்துடன்*